தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 255 | 4 Pages | 23.07.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 255 | 4 பக்கங்கள் | 23.07.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை**

**விளக்கம்:**
பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறேகாக்கவல்லதும்மழையாகும்.

# நீட் தேர்வு வினாத்தாள் கசிவு; என்.டி.ஏ. எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி கூறியது என்ன?

எம்.பி.க்கள் கூட்டத்தில், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக பிரதமர் மோடி கூறிய விசயங்களை பற்றி மத்திய மந்திரி ரிஜிஜு பகிர்ந்து கொண்டார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் ஆகஸ்டு மாதம் 13ந்தேதி வரை நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தொடரில் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, வருமான வரி (திருத்தம்) மசோதா, சுப்ரீம் கோர்ட்டு (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, பிறப்பு மற்றும் இறப்புகள் (திருத்தம்) மசோதா, தேசிய கவுரவத்துக்கு அவமதிப்பு தடுப்பு (திருத்தம்) மசோதா (வந்தே மாதரத்துக்கு இடையூறு செய்தால் 3 ஆண்டு சிறை விதிக்கும் மசோதா), சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அபிவிருத்தி (திருத்தம்) மசோதா ஆகிய 6 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

எனினும், நேற்றைய கூட்டத்தொடரின்போது, எதிர்க்கட்சிகள் கடுமையான அமளியில் ஈடுபட்டன. இதனால், இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன. 2வது நாளாக




எதிர்க்கட்சிகள் அமளியால் இரு அவைகளும் இன்றும் முடங்கின. பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

இந்த சூழலில், கூட்டத்தொடருக்கு முன்பு, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி தலைமையில், மங்கள் மிலன் என்ற பெயரில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்களின் கூட்டம் இன்று காலை நடந்தது. இதற்காக நாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் உள்ள ஜி.எம்.சி. பாலயோகி கூட்ட அரங்கில் கூட்டம் நடந்தது.

, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபீன், மத்திய மந்திரிகள் அமித்ஷா, ஜே.பி. நட்டா, ராஜ்நாத் சிங், நிதின் கட்காரி, அர்ஜுன் ராம் மேக்வால், கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பல முக்கிய மசோதாக்கள் மற்றும் நாடாளுமன்ற அவையில் எதிர்க்கட்சிகளின் அமளியை எதிர்கொள்வது ஆகியவை பற்றி கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மத்திய நாடாளுமன்ற விவகார துறை மந்திரி கிரண் ரிஜிஜு, பிரதமர் மோடி கூட்டத்தில்கூறிய விசயங்களைபகிர்ந்து கொண்டார். அவர் கூறும்போது,

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில், அதற்கு பொறுப்பானவர்களுக்கு, கடுமையான சாத்தியப்பட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

வினாத்தாள் கசிவுகளை தடுக்க வேண்டியது என்பது தேச அளவிலான, பொறுப்புணர்வு கொண்ட விசயம் என்று கூறினார். தேர்வு நடைமுறையில் முறைகேடு நடைபெறாத வகையிலான கட்டமைப்பை உருவாக்க கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்போது வலியுறுத்தினார்.

இதேபோன்று, அவையில் அலுவல்கள் சீராக நடைபெற கூட்டணி கட்சியினர் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறியதுடன், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வ முறையில் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

அரசியல் வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், நாட்டின் எதிர்காலம் மற்றும் இளைஞர்களின் நலனிற்காக பகிரப்பட்ட பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டிய பொறுப்பு, அனைத்து எம்.பி.க்களுக்கும் உள்ளது என பிரதமர் கூறினார் என்று மத்திய மந்திரி ரிஜிஜு கூறினார்.

## கயானா கப்பல் விபத்து 27 பேரின் உடல்கள் சடலமாக மீட்பு



ஜார்ஜ் டவுன், ஜூலை 23

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு கயானா. வடக்கு அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் இந்நாடு அமைந்துள்ளது.

இந்நிலையில், அந்நாட்டின் தலைநகர் ஜார்ஜ் டவுனில் இருந்து பரிமா வைனி நகருக்கு கடல் வழியாக கடந்த 18ம் தேதி சிறிய ரக கப்பல் புறப்பட்டது. அந்த கப்பலில் 179 பேர் பயணித்தனர்.

கப்பல் நடுக்கடலில் பயணித்த போது திடீரென கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் கப்பலில் பயணித்த அனைவரும் கடலில் மூழ்கினர்.

இதையடுத்து, அப்பகுதிக்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் பெண்கள், குழந்தைகள் உள்பட 69 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால், கடலில் மூழ்கிய 110 பேரின் நிலை என்ன? என்று தெரியவில்லை.

இதனால் கடலில் மூழ்கிய 110 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்ற அச்சம் எழுந்தது. கடலில் மூழ்கி மாயமானவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடலில் கப்பல் மூழ்கி விபத்துக்குள்ளான சம்பவத்தில் மாயமானவர்களில் 27 பேரின் உடல்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளது. மேலும், எஞ்சிய 83 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## கனடா பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிப்பு; டிரம்ப் அறிவிப்பு



டொரண்டோ, ஜூலை 23

கனடா பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது என்று டிரம்ப் அறிவித்து உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் வெள்ளை மாளிகையில் வெளியிட்ட செய்தியில், கனடா நாட்டு பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது என்று அறிவித்து உள்ளார். அமெரிக்காவின் ஆட்டோக்கள், ஆல்கஹால் மற்றும் பால் பொருட்களுக்கு எதிராக முறையற்ற வகையில் கனடா நடந்து கொண்டது என டிரம்ப் குற்றச்சாட்டாக கூறினார்.

இதற்கு பதிலாக இந்த வரி விதிகள் அமல்படுத்தப்படுகின்றன என்று அவர் கூறினார். இதன்படி, கனடா பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதனால், பணவீக்கம் அதிகரிக்கும் ஆபத்துகள் ஏற்படுவதுடன், புதிய பொருளாதார குழப்ப நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டு உள்ளது.

அதனுடன், டிரம்ப் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு, கனடா மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கு இடையே இருந்த இணக்கம் வாய்ந்த சூழலிலும் பாதிப்பு ஏற்படுத்தும்.

எனினும் இந்த வரி விதிப்புகளானது, எரிசக்தி பொருட்கள், பொட்டாஷ், மீன் மற்றும் முக்கிய தாதுக்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு இருக்காது. ஆனால், அமெரிக்காமெக்சிகோகனடா ஒப்பந்தத்தின்போது இறக்குமதி வரியில் இருந்து பாதுகாக்கப்பட்ட பொருட்களுக்கு இந்த 50 சதவீத வரி விதிப்பு இருக்கும்.

## உக்ரைனில் வர்த்தக கப்பல் மீது தாக்குதல்; 4 இந்தியர்கள் பலி



கீவ் ஜூலை 22

உக்ரைனில் வர்த்தக கப்பல் மீது நடந்த தாக்குதலில் 4 இந்தியர்கள் பலியாகி உள்ளனர். நேட்டோவில் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உக்ரைன் மீது கடந்த 2022ம் ஆண்டு ரஷியா போர் தொடுத்தது. உக்ரைனும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. இரு நாடுகளின் மோதல் 5வது ஆண்டாக தொடர்ந்து வருகிறது. இந்த சூழலில், ரஷியா மீது உக்ரைன் கடந்த 2 நாட்களுக்கு முன்பு நள்ளிரவில் நடத்திய டிரோன்கள் தாக்குதல்களில் 7 பேர் பலியானார்கள். 50 பேர் காயம் அடைந்துள்ளனர். ரஷியாவின் முக்கிய ஆயுத உள்கட்டமைப்புகள் மீது டிரோன்களை கொண்டு உக்ரைன் தாக்குதலில் ஈடுபட்டது. எண்ணெய் நிறுவனம் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கானது. நீண்டதூர இலக்குகளை தாக்கி அழிக்கும் டிரோன்கள் இந்த தாக்குதல்களில் ஈடுபட்டன. இந்த சூழலில், பதிலடியாக உக்ரைனின் கீவ் நகர் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு, பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை கொண்டு ரஷியா தாக்குதல் நடத்தியது. இந்த சம்பவத்தில் ஒருவர் பலியானார். 16 பேர் காயம் அடைந்தனர். இரவு 1.30 மணியளவில் தொடங்கி, நேற்று அதிகாலை வரை பல மணி நேரம் நடந்த இந்த தாக்குதலின் வெடிச்சத்தம் தலைநகரம் முழுவதும் எதிரொலித்தது. இந்த நிலையில், உக்ரைனின் ஒடேசா நகரில் உள்ள துறைமுகத்தில் இருந்து வர்த்தக கப்பல் ஒன்று புறப்பட்டு சென்றுள்ளது. அப்போது அந்த கப்பல் மீது ரஷியா திடீரென்று 3 நவீன ரக ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியது.

கோல்டன் லியோ என்ற பெயருடைய, கினியா நாட்டு கொடியுடன் சென்ற அந்த கப்பலில் இருந்த 4 இந்தியர்கள், ஏவுகணை தாக்குதலில் பலியாகி உள்ளனர். தவிர ஒருவர் காயமடைந்து உள்ளார். அவர் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவித்து உள்ளது. இதுதொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், வர்த்தக கப்பலை தாக்குவது, அப்பாவி ஊழியர்களை தாக்குவது அல்லது சுதந்திர முறையிலான கப்பல் இயக்கம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை முடக்குவது என்பது கண்டனத்திற்குரியது. இது தவிர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல்



தெஹ்ரான், ஜூலை 23

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஈரான், அமெரிக்கா இடையே மோதல் ஏற்பட்டது. மேலும், உலகின் மிகவும் முக்கிய கடல்வழி வர்த்தக பாதையான ஹர்முஸ் ஜலசந்தியை மூடுவதாக அறிவித்ததுடன் அவ்வழியாக சென்ற கச்சா எண்ணெய், சரக்கு கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானின் ராணுவ கட்டமைப்புகள், உள்கட்டமைப்புகள் உள்ளிட்டவை மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், ஈரான் அமெரிக்கா இடையேயான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், ஈரான் மீது அமெரிக்கா இன்று தொடர்ந்து 10வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானின் பண்டர் அப்பாஸ், குவாசம் தீவு, சாம்பஹார், கொனர்க், சிரிக் போன்ற துறைமுக நகரங்கள் மீது அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலால் உயிரிழப்பு ஏற்பட்டதா? என்பது குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

அதேவேளை, ஈரான் மீதான அமெரிக்காவின் தொடர் தாக்குதலால் மத்திய கிழக்கில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## சரக்கு கப்பல் மீதான தாக்குதலில் 4 இந்தியர்கள் பலி ரஷிய தூதருக்கு மத்திய அரசு சம்மன்



டெல்லி, ஜூலை 23

உக்ரைன், ரஷியா இடையேயான போர் 4 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வருகிறது. இந்த போரில் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, இரு தரப்பும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனிடையே, உக்ரைனின் ஒடேசா நகரதுறைமுகத்தில் இருந்து கடந்த 19ம் தேதி கினியா பிசாவ் நாட்டு கொடியுடன் புறப்பட்ட சரக்கு கப்பல் மீது ரஷியா ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் கப்பலில் பயணித்த 4 இந்தியர்கள் உயிரிழந்தனர். மேலும், ஒரு இந்திய மாலுமி படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், சரக்கு கப்பல் மீதான ரஷியாவின் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த தாக்குதல் தொடர்பாக ரஷிய தூதருக்கு மத்திய அரசு சம்மன் அனுப்பியுள்ளது.

## 2வது நாளாக எதிர்க்கட்சிகள் அமளி; இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைப்பு

புதுடெல்லி ஜூலை 23

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் அமளியால் இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு தேசிய கீதத்துடன் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் ஆகஸ்டு மாதம் 13ந்தேதி வரை நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தொடரில் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, வருமான வரி (திருத்தம்) மசோதா, சுப்ரீம் கோர்ட்டு (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, பிறப்பு மற்றும் இறப்புகள் (திருத்தம்) மசோதா, தேசியகவுரவத்துக்குஅவமதிப்புதடுப்பு (திருத்தம்) மசோதா (வந்தே மாதரத்துக்கு இடையூறு செய்தால் 3 ஆண்டு சிறை விதிக்கும் மசோதா), சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அபிவிருத்தி (திருத்தம்) மசோதா ஆகிய 6 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

எனினும், நேற்றைய கூட்டத்தொடரின்போது, எதிர்க்கட்சிகள் கடுமையான அமளியில் ஈடுபட்டன. இதனால், இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில், நாடாளுமன்றம் இன்று காலை 2வது நாளாக கூடியது. அப்போது, எதிர்க்கட்சிகள் பல்வேறு விவகாரங்களை முன்னிறுத்தி அமளியில் ஈடுபட்டன. டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் இளைஞர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டபோது அவர்கள் மீது போலீஸ் தடியடி நடத்தப்பட்டது. இதில், இளைஞர்கள் பலருக்கு காயம் ஏற்பட்டது.

இதனை கண்டிக்கும் வகையில், அவையில் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதேபோன்று, மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் அவர்கள் கோஷம் எழுப்பினர். இதனால், இரு அவைகளும் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

இதன்பின்னர், 12 மணிக்கு இரு அவைகளும் மீண்டும் கூடின. அப்போது, டெல்லியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் போலீசார் தடியடி நடத்தியது தொடர்பாக மாநிலங்களவையில் எம்.பி.க்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று, மக்களவையில் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

## பீகாரில் பயங்கரம்: பள்ளிக்கு சென்ற மாணவி சுட்டுக்கொலை





பாட்னா, ஜூலை 22

பீகார் மாநிலம் சமஸ்திபூர் மாவட்டம் கைஜியாகிராமத்தை சேர்ந்தவர்உமேஷ். இவரது மகள் சோனம் குமாரி (17). இவர் கிராமத்திற்கு அருகே உள்ள புசா நகரில் செயல்பட்டு வரும் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில், மாணவி சோனம் குமாரி நேற்று காலை பள்ளிக்கு நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது பைக்கில் வந்த இளைஞர் சோனம் குமாரியை துப்பாக்கியால் சுட்டுள்ளார். இந்த துப்பாக்கி சூட்டில் சோனம் குமாரி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்து உயிரிழந்தார்.

இது குறித்து அறிந்த போலீசார் விரைந்து சென்று மாணவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், மாணவியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்ற இளைஞரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் அதேகிராமத்தை சேர்ந்த இளைஞர் மாணவியை காதலிக்கும்படி வற்புறுத்தி வந்ததாகவும், அதற்கு மாணவி மறுப்பு தெரிவித்ததால் அவரை சுட்டுக்கொன்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோபி அருகே

# வீட்டில் போதை பொருள் பதுக்கல்!

### அரசு பஸ் கண்டக்டர் உட்பட 2 பேர் கைது!!

கோபி, ஜூலை 23

கோபி அடுத்த கடத்தூர் போலீஸ் சரகத்திற்குட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை கடை மற்றும் வீட்டில் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக மாவோயிஸ்ட் தடுப்பு பிரிவு போலீ சாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில், அவர்கள் கடத்தூர் போலீசாருடன் இணைந்து. கோபி அருகே போடி சின்னா ம்பாளையத்தில் உள்ள ஒரு பேக்கரி கடையில் திடீர் சோதனை நடத்தினார்கள். வேலை அப்போது அங்கு செய்து வரும் ஒத்தக்குதிரையைச் சேர்ந்த பிரதாப்(32) என்பவரை பிடித்து விசாரணை செய்தனர். பின்னர் அவர் கொடுத்த தகவலின் பேரில், அரசு போக்குவரத்துக்கழக கோபி கிளையில் கண்டக்டராகப் பணியாற்றி வரும் அளுக்குளி, போடி சின்னாம்பாளையத்தைச் சேர்ந்த கருப்பு சாமி (42) என்பவரின் வீட்டில் சோதனை நடத்தி அங்கிருந்தபொருட்களான விமல், வி1, ஹான்ஸ், கூல்லிப் உள்ளிட்ட சுமார் 4 கிலோ பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக கடத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிரதாப் மற்றும் கருப்புசாமி ஆகிய 2 பேரை கைது செய்தனர்.



மேலும், அவர்களிடமிருந்த ரூ.3 ஆயிரத்து 520 தொகையையும் போலீசார் பறிமுதல் செய்தனர்







ஜி.கே.என்.எம். நர்சிங் கல்லூரியை, துணை ஜனாதிபதி சி.பி.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் தமிழக கவர்னர் அர்லேகர், குப்புசாமி நாயுடு அறக்கட்டளை தலைவர் ஆர்.கோபி நாத், துணைத்தலைவர் சஞ்சய் ஜெயவர்தனவேலு, ஜி.கே.என்.எம். மருத்துவமனை முதன்மைசெயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி ஆகியோர் உள்ளனர்.

## ஜி.கே.என்.எம். நர்சிங் கல்லூரி திறப்பு விழா :

# இந்தியா வளர்ந்த நாடாக சுகாதாரத்துறையில் மிகப்பெரிய வெற்றியை பெற வேண்டும்!

### துணை ஜனாதிபதி சி.பி.ராதா கிருஷ்ணன் பேச்சு!!

கோவை,ஜூலை.23

கோவையில் கடந்த 1984ம் ஆண்டு முதல் ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் ஒரு அங்கமாக செயல்பட்டு வந்த செவிலியர் பயிற்சி நிறுவனம், தற்போது ஜி.கே.என்.எம். நர்சிங் கல்லூரியாக அமைக்கப்பட்டது. அதன் திறப்பு விழா நடந்தது. குப்புசாமி நாயுடு அறக்கட்டளை தலைவர் ஆர். கோபி நாத், துணைத்தலைவர் சஞ்சய் ஜெயவர்தனவேலு, ஜி.கே.என்.எம். மருத்துவமனை முதன்மைசெயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக கவர்னர் அர்லேகர் கலந்துகொண்டு பேசினார். விழாவில் துணை ஜனாதிபதி சி.பி.ராதா கிருஷ்ணன் கலந்து கொண்டு ஜி.கே.என்.எம். நர்சிங் கல்லூரியை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர்

கூறியதாவது,

நர்சிங் கல்லூரிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவமாணவிகள் சேர்வது மக்களிடையே ஆரோக்கியம் குறித்த மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பே குப்புசாமி நாயுடு தொடங்கி வைத்த இந்த சேவை, இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர வேண்டும். அவருடையஇந்த அறக்கட்டளையின் சேவை மற்றும் மருத்துவ பணிகள் பாராட்டத்தக்கவை. கண்தானம், உடலுறுப்பு தானம் என்பது இன்றைக்கு மக்களிடையே மிகப்பெரிய விழிப்புணர்வை பெற்று வருகிறது. தற்போது பொதுமக்கள் பலரும் கண்தானம் செய்ய முன்வருகின்றனர். நாம் கொடுப்பது பிறருக்கு பயன்படும் போது, அதை கொடுக்க தயங்கக்கூடாது என்ற உணர்வு அனைவருக்கும் வர வேண்டும்.

நான்ஜார்க்கண்ட் மாநில கவர்னராக இருந்தபோது, பிரதமர் மோடியின் பிறந்த நாளில் முதல் ஆண்டில் 72 பேர், அடுத்த ஆண்டில் 240 பேர், அதற்கு அடுத்த ஆண்டில் 7,500 பேரிடம் கண்தானம் பெறப்பட்டது. இந்த ஆண்டு 76 ஆயிரம் பேரிடம் கண்தானம் பெற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தமிழகத்தில் உறுப்பு தானம் முறைப்படுத்தப் பட்டு, எண்ணற்ற உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருவது நமக்கு பெருமை.

2047ம் ஆண்டில் இந்தியா வளர்ந்த நாடாகவும், இந்த உலகத்துக்கே வழிகாட்டும் தேசமாகவும் உயர வேண்டும் என்றால் நாம் சுகாதாரத் துறையில் மிகப்பெரிய வெற் றியை பெற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். விழாவில் குப்புசாமி நாயுடு தொண்டு அறக்கட்டளை நிர் வாகிகள், ஜி.கே.என்.எம். மருத்துவமனை டாக்டர்கள், நர்சுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## பாலக்கோடு அருகே

# வீட்டிற்குள் புகுந்த 4 அடி நீள நல்ல பாம்பு!

### தீயணைப்புத் துறையினர் உயிருடன் மீட்பு!!

பாலக்கோடு ஜூலை.23–

பூத்துப்பட்டி கிராமத்தைச்சேர்ந்ததிம்மராயன் என்பவரின் வீட்டில் நேற்று வழக்கம்போல் குடும்பத்தினர் தங்களது அன்றாட பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வீட்டின் ஒரு பகுதியில் சுமார் 4 அடி நீளமுள்ள நாகப்பாம்பு ஊர்ந்து செல்வதை கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.



விஷத்தன்மை கொண்ட நாகப்பாம்பு வீட்டிற்குள் இருந்ததால், குடும்பத்தினர் அலறியடித்தபடி உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்தில் நின்றனர்.

இதையடுத்து, பாலக்கோடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் கிடைத்தவுடன் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, வீட்டின் அனைத்து பகுதிகளிலும் தீவிரமாக தேடுதல் மேற்கொண்டனர்.

சிறிது நேர தேடுதலுக்குப் பிறகு, வீட்டின் ஒரு பகுதியில் பதுங்கியிருந்த நாகப்பாம்பை கண்டுபிடித்தனர்.

பின்னர், சிறப்பு பாம்பு பிடிக்கும் கருவிகளை பயன்படுத்தி, மிகுந்த எச்சரிக்கையுடன் நீண்ட நேரம் போராடி, சுமார் 4 அடி நீளமுள்ள நாகப் பாம்பை எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் உயிருடன் பிடித்து மீட்டனர்.

தொடர்ந்து, மீட்கப்பட்ட நாகப்பாம்பு வனத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதனை இயற்கை வாழ்விடமான வனப்பகுதியில் பாதுகாப்பாக விடுவிக்க வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.



பவானி சங்கமேஸ்வரர் கோவிலுக்கு வருகை புரிந்த காஞ்சி சங்கராச்சாரியர் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமியை பவானி ஆதீனம் பாலாஜி அய்யர் வரவேற்றார்.

## மனித உரிமை மீறல் புகார்:

# சென்னையில் வரும் 25-ந் தேதி உண்ணாவிரத போராட்டம்!

### ஹிந்துஸ்தான் மக்கள் சேவா இயக்க தலைவர் அறிக்கை!!

கோவை,ஜூலை 23

ஹிந்துஸ்தான் மக்கள் சேவா இயக்கத்தின் தலைவர் லோட்டஸ் மணிகண்டன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோவை மாநகர காவல் துறை மற்றும் கோவை மாநகர நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை சில நபர்களைத் தூண்டிவிட்டு, என் மீது பொய்யான வழக்குகளைப் பதிவு செய்து, என்னை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியுள்ளன.

மேலும், எனது குடும்பத்தினரின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த உச்சபட்ச மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி, கடந்த 22ந்தேதி மாநில



மனித உரிமை ஆணைய நீதிபதியை நேரில் சந்தித்து முறையீட்டு மனு அளித்தோம். மனுவைப் பெற்றுக்கொண்ட ஆணையம், புகார் குறித்து விரைவில் விசாரணை நடத்துவதாக உறுதி அளித்துள்ளது.

தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமாரையும் குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்துள்ளோம். மனித உரிமை மீறல்களை கண்டித்து, வருகிற 25ந்தேதி சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் முன்பாக குடும்பத்தினருடன் அறவழியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இதற்கான அனுமதி கோரி சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் ஏற்கனவே மனு அளிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் லோட்டஸ் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

## கோபியில்

# சப்-இன்ஸ்பெக்டரை தாக்கிய கட்டிட தொழிலாளி கைது!

கோபி, ஜூலை 23

கோபி, போக்குவரத்து போலீசில் எஸ்.ஐ. ஆக பணியாற்றி வருபவர் தண்டபாணி(54). இவர் நேற்று முன்தினம் காலை பஸ் ஸ்டாண்ட் அருகில் பணியில் இருந்தார். அப்போது அங்கு போதையில் டூவீலரை ஓட்டி வந்த கூகலூரைச் சேர்ந்த கார்த்திகேயன்(37) என்ற கட்டிட தொழிலாளி முன்னால் சென்ற கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி இருந்தார். இது தொடர்பாக கார் உரிமையாளர், கார்த்திகேயனிடம் கேட்ட போது அவர் தகராறு செய்தார். அப்போது அங்கு பணியில் இருந்தபோக்குவரத்து எஸ். ஐ தண்டபாணி, தகராறில் ஈடுபட்ட கார்த்திகேயனிடம் விசாரணை செய்தார்.

அதனால், ஆத்திரமடைந்த கார்த்திகேயன் தகாத வார்த்தைகள் பேசியதுடன் எஸ்.ஐ. தண்டபாணியின் கன்னத்தில் அறைந்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து எஸ்.ஐ. தண்டபாணி கொடுத்த புகாரின் பேரில், கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து கார்த்திகேயனை கைது செய்தனர்.



பிரதமர் மோடி குறித்து இன்ஸ்டாகிராமில் அவதூறான பதிவு குறித்து கோவை போலீஸ் கமிஷனரிடம் பா.ஜ.க.வினர் புகார் மனு கொடுத்தனர்.

# பிரதமர் மோடி குறித்து இன்ஸ்டாகிராமில் அவதூறான பதிவு!

### கோவை போலீஸ் கமிஷனரிடம் பா.ஜ.க. புகார்!!

கோவை, ஜூலை 23

கோவை பாஜக மாநகர் மாவட்டத் தலைவர் ஜெ. ரமேஷ் குமார் இன்ஸ்டாகிராம் பதிவுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு குறிப்பிட்ட இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நாட்டின் பிரதமர் நரேந்திர மோடியின் புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து அவதூறான தகவல்கள் பதிவிடப்பட்டிருப்பதைக் கண்டு அவர் கடும் அதிர்ச்சியடைந்தார்.

தொடர்ந்து பாஜக மாநகர் மாவட்டத் தலைவர் ஜெ. ரமேஷ் குமார் தலைமையில் பாஜக மாநிலச் செயலாளர் நந்தகுமார் , வழக்கறிஞர்கள் மாதவன் கலைச்செல்வன் மற்றும் மகாவேணு ஆகியோர் கவை போலீஸ் கமிஷனர் டாக்டர் கண்ணனிடம் புகார் மனு அளித்தனர் . அதில் ஹுசைன் அகமது என்ற நபர் பயன்படுத்தி வரும் இன்ஸ்டாகிராம் முகவரியில் பிரதமர் நரேந்திர மோடி புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், அவதூறு பரப்பும் வகையிலும் தொடர்ந்து பொய் பதிவுகளைப் வெளியிட்டு வருகிறார்.

பிரதமர்நரேந்திரமோடி குறித்து சித்தரித்து, கெட்ட எண்ணத்துடன் வதந்தியைப் பரப்பியுள்ளார்.

மத நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து, இரண்டு மதங்களுக்கு இடையே மோதலையும் கலவரத்தையும் ஏற்படுத்தி, அதன் மூலம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை உருவாக்க இவர் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறார்.

"பிரதமரின் பெயருக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்தி, சமூகத்தில் அமைதியைக் கெடுக்க முயற்சிக்கும் ஹுசைன் அகமது மீது உடனடியாகக் கிரிமினல் வழக்குப் பதிவு செய்து, தீவிர விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று புகாரில் தெரிவித்துள்ளார்.

# கோவை கட்டுமான பொறியாளர்கள் தொழில்நுட்ப கலந்தாய்வு கூட்டம்!

கோவை,ஜூலை 23

கோவை மாவட்ட அனைத்து கட்டுமான பொறியாளர்கள் சங்கத்தின் தொழில்நுட்ப கலந்தாய்வு கூட்டம் கோவை அவிநாசி சாலையில் அமைந்துள்ள தனியார் அரங்கில் நடைபெற்றது. இதில் சங்கத்தின்தலைவர் பொறியாளர் ராமலிங்கம் வரவேற்புரையாற்றினார். சங்கத்தின் செயலாளர் பொறியாளர் மணிகண்டன் செயல் அறிக்கையை சமர்ப்பித்தார் .

இவ்விழாவில் மாடுலர் கட்டுமான முறைகள் என்ற தலைப்பில் முன்னாள் தலைவர் பொறியாளர் விஜயகுமார் தொழில்நுட்பவிளக்கம்அளித்தார். இந்நிகழ்வின் முன்னதாக சங்கத்தின் சமூக சேவையாக ஆதரவற்ற பெண்ணுக்குதையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

மேலும் துணைத்தலைவர் பொறியாளர் தங்கவேல் பில்டு எக்ஸ்கான் 2026யினை பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்கள். தொடர்ந்து




குமரன் ரெடிமிக்ஸ் கான்கிரீட் மற்றும் ஸ்ரீ சக்கரா ட்ரேடர்ஸ் கலந்து கொண்டு தங்களது புரடெக்ட் பற்றி எடுத்துரைத்தனர் .

பொருளாளர் பொறியாளர் கவிராஜ் நன்றியுரை கூறினார். இக்கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாக குழுவினர்கள் செயற்குழு உறுப்பினர்கள் கோர்க்கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## உடுமலை ரெயில்வே ஸ்டேஷனில்

# கண்காணிப்பு கேமரா அமைக்க கோரிக்கை!

உடுமலை,ஜூலை 23

உடுமலை ரயில்வே ஸ்டேஷனில் கண்காணிப்பு கேமரா அமைக்க ரயில்வே தொழில் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




கோவைதிண்டுக்கல் அகல ரயில் பாதையில் உடுமலை ரயில்வே ஸ்டேஷன் உள்ளது இதன் வழியாக ஆறு ரயில்கள் செல்கின்றன இதனால் அந்த ரயில்களில் நூற்றுக்கணக்கான பயணியர் பயணம் செல்கின்றனர். குறிப்பாக விடுமுறை நாட்களில் ரயில்வே ஸ்டேஷனில் பயணியர்அதிகஅளவில்வந்து செல்வர் எனவே இங்கு பயணியரின் பாதுகாப்பு கருதியும் சமூக விரோதிகளை தடுக்கவும் உடுமலை ரயில்வே ஸ்டேஷனில் கண்காணிப்பு கேமரா அமைக்க தெற்கு ரயில்வே அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொழிலாளி தற்கொலை!

கோபி ஜூலை 23

கோபி அருகே சிங்கிரிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர்செல்வகுமார்( 49.)கூலித்தொழிலாளி. திருமணமான இவர் மனைவியிடம் விவாகரத்து பெற்று தனது தாயுடன் வசித்து வந்தார். மேலும் மனநிலை பாதிக்கப்பட்டு வேலைக்கு செல்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அவர் கடந்த 20ந் தேதி அருகே உள்ள தோட்டத்துக்கு சென்று விஷம் குடித்து மயங்கி கிடந்தார். இதை பார்த்த உறவினர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக சத்தியமங்கலத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட் டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி செல்வகு மார் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இதுகுறித்து கடத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

மாண்பமை சார்பு நீதிமன்றம் அரூர்
IA: NO :1/2026.
IN OSNO 160/2025
சித்ரா
/மனுதாரர்/வாதி
//எதிராக//
வெங்கடேசன்(வ)
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
அறிவிப்பு

மேற்படி வழக்கில் 4ம் எதிர்மனுதாரரான கோயம்பத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர், உழவர் சந்தை பின்புறம், ராயல் காட்டேஜ் அவுசிங் யுனிட், எண்.1142A என்ற முகவரியில் வசிக்கும் லேட்.கோபால் குமாரர் சுமார் 44 வயதுள்ள தேவேந்திரன் அவர்களுக்கு பலமுறை நீதிமன்றம் மூலம் அழைப்பானை அனுப்பியும் சார்வு செய்யப்படாத காரணத்தால் மனுதாரர் /வாதி சார்பாக I.A.:NO:1/2026 என்ற இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி 4ம் எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது அவரது வழக்கறிஞர் மூலம் வருகிற 07.08.2026 தேதியன்று காலை 10.30மணிக்கு மாண்பமை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது

//கனம் கோர்ட்டார் உத்தரவுபடி//
மனுதாரர் /வாதி வழக்கறிஞர்
ஜெ.பிரவின்குமார்
அரூர் வட்டம்
தருமபுரி மாவட்டம்

உயர்திரு சார்பு நீதிமன்றம் அவர்கள் சமூகம், உடுமலைப்பேட்டை
I.A. 112/2025
H.M.O.P.No. 217/2022
K.சுரேஷ்குமார்
மனுவாதி/மனுவாதி
/எதிர்/
V.மகேஸ்வரி
எதிர்மனுவாதி / எதிர்மனுவாதி
பொது அறிவிப்பு

மேற்படி நெம்பர் வழக்கில் மனுவாதி தனக்கும் எதிர்மனுவாதியான தன் மனைவிக்கும் கடந்த 10.04.2019 தேதி நடந்த திருமணத்தை ரத்து செய்ய வேண்டி பரிகாரம் கோரி தாக்கல் செய்த மேற்படி வழக்கில் மனுவாதி கடந்த 23.2.2023ம் தேதி மனுவாதி ஆஜராகாத காரணத்தினால் மேற்படி வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது, அதனால் மேற்படி மனுவாதி சமூக நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்து மேற்படி மனு 1.A.No.112/2025 I.A.No.150/2026 என்றும் நெம்பராகி மேற்படி மனுக்கள் வரும் 30.7.2026 தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே நீங்கள் அன்றைய தினம் காலை 10.30 க்கு சமூக நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சம் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

A.BALAMURUGAN, B.Sc., B.L.
ADVOCATE, Udumalpet

Edited, and Published by S. N. Selvam on behalf of M/s. Chennai Murasu Private Ltd, from No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006 and Printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006. RNI Registration No. TNTAM/2016/75063.



கோவைக்கு வருகை புரிந்த துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பிற்படுத்தப்பட்டோர்நலத்துறைஅமைச்சர்சம்பத்குமார்மலர்கொத்துவழங்கிவரவேற்றார்.

## த.வெ.க.ஆட்சியில்

# இதுவரை 183 கோயில்களில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது!

## அறநிலையத்துறை தகவல்!!

சென்னை, ஜூலை.23

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரை 183 கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தமிழகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் புதிய அரசு பதவியேற்றதை தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோயில்களில் புனரமைப்புப் பணிகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் 43,646 கோயில்கள், 27 சமணக் கோயில்கள், 45 மடங்கள், 83 மடத்துடன் இணைந்த கோயில்கள் மற்றும் 1,330 அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் (2021– 2026 பிப்ரவரி வரை), 20 முதல் 400 ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் நடைபெறாத 4,332 கோயில்கள் கண்டறியப்பட்டு, ரூ.1,190 கோடி மதிப்பீட்டில்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

தற்போது த.வெ.க. ஆட்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ரமேஷ், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கோயில்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்தநிலையில், த.வெ.க. அரசு பொறுப்பேற்று, கடந்த மே 14–ம் தேதி முதல்தற்போதுவரை, குறுகிய காலத்திலேயே 183 கோயில்களில் புனரமைப்புப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

முந்தைய ஆட்சியில் தொடங்கப்பட்ட ஆன்மிகப் பணிகளைத் தொய்வின்றித் தொடர்வதோடு, பழமையான கோயில்களின் தொன்மை மாறாமல் பாதுகாப்பதில் இந்த அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் இதுவரை 9,205 கோயில்களுக்குப் பரம்பரை முறைசாரா அறங்காவலர்களை நியமிக்க விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த மாதம் 14–ம் தேதி 214 கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க அறநிலையத்துறை அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஜூலை 22 (நேற்று) கடைசி நாள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்த காலஅவகாசத்தை நீட்டித்து அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது. அதன்படி, ஆக.12ம் தேதி மாலை 5.45 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் முறையான விண்ணப்பப் படிவத்தைப்பூர்த்தி செய்து, இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளம் வழியாகப் பதிவேற்றம் செய்யலாம். மேலும், சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம் என்று அறநிலையத்துறை கூறியுள்ளது.

## திட்டங்களுக்கு பெயர் மாற்றுவதை விட்டுவிட்டு

# நாட்டு நலனில் முதல்வர் விஜய் கவனம் செலுத்த வேண்டும்!

## துரைமுருகன் பேட்டி!!

வேலூர், ஜூலை.23–

தி.மு.க.வின் திட்டங்களுக்கு பெயர் மாற்றுவதைவிட்டுவிட்டு, நாட்டு நலனில் முதல்வர் விஜய் கவனம் செலுத்த வேண்டும் என்று தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் தெரிவித்தார்.

இதுகுறித்த விவரம் வருமாறு:–

காட்பாடி கழிஞ்சூர் பகுதியை சேர்ந்த தி.மு.க. தலைமை கழக பேச்சாளரும் மாவட்ட பிரதிநிதியுமான கழிஞ்சூர் கண்ணன் உடல் நலக்குறைவால் கடந்த 17–ந்தேதி உயிரிழந்தார். கழிஞ்சூர் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் மலர் தூவி மரியாதை செய்ததுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் முதலமைச்சரின் காலைஉணவுதிட்டத்திற்கு 'பெருந்தலைவர் காமராஜர்காலை உணவு திட்டம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறித்த கேள்விக்கு காமராஜர் கொண்டு வந்தது மதிய உணவு திட்டம் அதற்கு பெயரிட்டாலும் பரவாயில்லை, எம்.ஜி.ஆர். அதை விரிவு படுத்தினார் அவர் பெயர் வைத்தாலும் பரவாயில்லை. காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தவர் முதல்வராகஇருந்தமு.க.ஸ்டாலின் அந்தப் பெயரை மாற்றுவதில் ஒரு முதலமைச்சர் ஈடுபடுவது முறையல்ல. இப்படிப்பட்ட விஷயங்களில் அவர் கவனம் செலுத்துவதை விட நாட்டில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பது எப்படி? என்பதில் அவர்கவனம் செலுத்த வேண்டும்.

ஜெயலலிதா படம் போட்ட பைகள் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இருந்தது. இதை மாற்ற வேண்டுமா என கேட்டபோது தேவையில்லை அரசாங்கத்தின் பணத்தில் தான் அடிக்கப்பட்டது. அதனால்அதே படத்துடன் இருக்கட்டும் என்று தான் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

அந்த பெருந்தன்மை தற்போது உள்ள முதலமைச்சருக்கு வரவேண்டும். அம்மா உணவகம் என்று அ.தி.மு.க. ஆட்சியில் செய்தார்கள் நாங்கள் நினைத்திருந்தால் அதை மாற்றி இருக்க முடியும். ஆனாலும் தேவையில்லை.ஒருமுதலமைச்சர் ஆரம்பித்திருக்கிறார். அப்படியே இருக்கட்டும் என்று நாங்கள் பெருந்தன்மையாக இருந்தோம். இவ்வாறு அவர்கூறினார். பேட்டியின்போது துணை மேயர்சுனில்குமார், நரசிம்மன், ஹரி, தேவநேசன் உட்பட பலர் இருந்தனர்.



சென்னையில் சுட்டெரித்த வெயிலில் இருந்து தன்னை பாதுகாக்க முகத்தை துணியால் மூடியபடி சென்ற பெண்.

## தமிழகத்தில்

# ஒரே வாரத்தில் 1,155 ரவுடிகள் கைது!

## போலீசார் அதிரடி நடவடிக்கை!!

சென்னை,ஜூலை.23

தமிழகத்தில் கொலை, கொள்ளை, வழிப்பறி, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்பட அனைத்து வகை யான குற்றச்செய ல்களையும் முற்றிலும் தடுக்கஅனைத்து மாவட்ட போலீஸாருக்கும் டி.ஜி.பி. மகேஷ் குமார் அகர்வால் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, ரவுடிகள், சமூக விரோதிகள் மற்றும் தலைமறைவு குற்றவாளிகளுக்கு எதிராக தமிழகம் முழுவதும் போலீஸார் சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.

கடந்த 15 முதல் 21–ம் தேதி வரை மாநிலம் முழுவதும் 31 ஆயிரத்து 5 சரித்திரப்பதிவேடு ரவுடிகள், குற்றக் குணத்தார் மற்றும் குற்றப் பின்னணி கொண்டவர்கள் தீவிரமாக சோதனை செய்யப்பட்டனர். இதில் பல்வேறு குற்றச்செயல்களில் தொடர்புடைய 1,155 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், பிணையில் வெளிவர முடியாத பிடியாணைகளைநிறைவேற்றும் நடவடிக்கையில், ஒரே வாரத்தில் 2,906 பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டன. நிலுவையில்உள்ள பிடியாணைகளை முழுமையாக நிறைவேற்றவும், தலைமறைவாக உள்ள குற்றவாளி களை கைது செய்யவும் போலீஸார் தொடர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, பிணை நிபந்தனைகளை மீறி மீண்டும் மீண்டும் குற்றங்களில் ஈடுபடும் நபர்களின் ஜாமீனை ரத்து செய்ய தேவையான சட்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்.பி.க்கள் மற்றும் சிறப்பு பிரிவு அதிகாரிகளுக்கு டி.ஜி.பி. உத்தரவிட்டுள்ளார்.

## சென்னை அருகே

# வழி தெரியாமல் வந்த புள்ளி மான் தெரு நாய்கள் கடித்து பலி!

சென்னை, ஜூலை. 23–

சென்னை மாதவரம் 200 அடி சாலை கேவிடி லாரி பார்க்கிங் பகுதியில் நேற்று புள்ளி மான் ஒன்று வழி தெரியாமல் வந்ததாக கூறப்படுகிறது.

அப்போது அங்கு சுற்றி வந்த தெரு நாய்கள் சில அந்த புள்ளி மானைவிரட்டி கடித்ததில் மான் சம்பவத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது.இதனை பார்த்த அப்பகுதி மக்கள் உடனே காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்ததன் பேரில் மாதவரம் போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

பின்னர் போலீசார் வனவிலங்கு அறிவியல் துறை சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலின் பேரில் வனவிலங்கு அறிவியல் துறை அதிகாரிகள் மற்றும் கால் நடை மருத்துவர்கள் உயிரிழந்த புள்ளி மான் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கால் நடை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் இந்த சம்பவம் குறித்து மாதவரம் போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக புள்ளி மான் எங்கிருந்து வந்தது, யாரேனும் மானை கடத்தி சென்றபோது மான் தப்பி வந்ததா என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை தண்டலம் அருகே

# ரவுடி வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு!

## இருசக்கர வாகனத்தில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் தப்பி ஓட்டம்!!

சென்னை, ஜூலை. 23–

சென்னை அடுத்த தண்டலம் அணணா நகர் சாந்தி தெருவை சேர்ந்தவர் ராஜ்குமார்(27).. ரவுடி சரித்திரபதிவேடு குற்றவாளியுமான இவர் தனது மனைவி பிள்ளைகளுடன் வசித்து வருகிறார்.. ஆட்டோ ஓட்டுநரான ரவுடி ராஜ்குமார் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது.. இந்நிலையில் கடந்த 20/5/26 அன்று வானகரம் போலீசார் குற்ற வழக்கு ஒன்றில் ராஜ்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் நேற்று இரவு ரவுடி மனைவி ஆனந்தி (26) வீட்டில் இருந்த போது இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று இரண்டு பெட்ரோல் குண்டுகளை ரவுடி வீட்டின் மீது வீசி விட்டு தப்பி சென்றது. பெட்ரோல் குண்டு வெடித்து சிதறியதில் வீட்டு வாசலில் இருந்த சில பொருட்கள் தீப்பிடித்து எரிந்தது.. இந்த பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை.

பின்னர் இந்த சம்பவம் குறித்து ரவுடி மனைவி ஆனந்தி வானகரம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பெட்ரோல் குண்டு வீசிய கும்பலை தேடிவருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் முன்விரோதம் காரணமாக பெட்ரோல் குண்டு வீசியது தெரியவந்துள்ளது.

## புதுப்பேட்டை அருகே

# பிளாஸ்டிக் குடோனில் பயங்கர தீ விபத்து!

## பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தீயில் எரிந்து சேதம்!!

சென்னை, ஜூலை.23–

சென்னை புதுப்பேட்டை வெங்கடாசலம் தெருவில் உள்ள வணிக வளாகத்தில் இரண்டாவது தளத்தில் சாகுல் ஹமீது என்பவர் சொந்தமாக பிளாஸ்டிக் குடோன் ஒன்றை நடத்தி வருகின்றார். கடந்த 5 வருடங்களாக இருசக்கர வாகனத்திற்கு தேவையான பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்து வருகின்றார்.

இந்நிலையில் இன்று மதியம் எதிர்பாராத விதமாக குடோன் தீப்பிடித்து எரிந்து கரும்புகை வெளியேறியது..

உடனே சாகுல் ஹமீது மற்றும் ஊழியர்கள் அவசர அவசரமாக கடையில் இருந்து வெளியேறிய நிலையில் தீ குடோன் முழுவதும் பரவி எரிய தொடங்கியது.

உடனே சாகுல் இது குறித்து காவல்துறை மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தன் பேரில் திருவல்லிக்கேணி, எழும்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் மற்றும் எழும்பூர் போலீசார் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.. மேலும் தீ அடுத்த கடைக்கு பரவாமல் தடுத்ததால் பெரும் தீவிபத்து தவிர்க்கப்பட்டது.. ஒரு மணி நேர போராட்டத்திற்கு பிறகு தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.. இந்த தீவிபத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை மாறாக பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தீயில் எரிந்து நாசமாயின..

பின்னர் இந்த தீவிபத்து குறித்து எழும்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.. முதற்கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டது தெரியவந்துள்ளது.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மதுபாலன் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# ஆளுநர் மாளிகை முற்றுகை; மாதர் அமைப்பினர் கைது!

சென்னை:ஜூலை.23–

மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவில் தொகுதி மறுவரையறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு போன்ற நிபந்தனைகளைச் சேர்க்காமல் நடப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரிலேயே சட்டமாக்கி அமல் படுத்தக் கோரி, மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான தேசிய பெண்கள் கூட்டமைப்பு மற்றும் அனைத்து பெண்கள் கூட்டமைப்புசார்பில், ஆளுநர் மாளிகை முற்றுகையிடும் போராட்டம் நேற்று நடைபெற்றது.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் உ.வாசுகி தலைமையில், 300க்கும் மேற்பட்ட பெண்கள் சின்னமலையில் இருந்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிட ஊர் வலமாக புறப்பட்டுச் சென்றனர். ஆனால், தடையை மீறி அவர்கள் செல்ல முற்பட்டதால் போலீஸார் அவர்களை கைது செய்தனர்.

இதில் அனைத்திந்திய ஜனநாயகமாதர்சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜி.பிரமிளா, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் மஞ்சுளா, தேசியச் செயலாளர் ஏ.ஆர்.சாந்தி, அகில இந்திய முற்போக்கு பெண்கள் சங்கத்தின் தலைவர் பங்கேற்றனர்.

# பழனி கோயில் சொத்துக்களை ஆய்வு செய்ய புதிய குழு அமைப்பு!

## இந்து சமய அறநிலையத்துறை தகவல்!!

சென்னை, ஜூலை.23–

பழனி தண்டாயுதபாணி சுவாமி மடத்துக்குச் சொந்தமானசுமார் ரூ.100 கோடி மதிப்பிலான நிலங்கள் மோசடியாகப் பதிவு செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, கோயில் சொத்துகளின் பயன்பாட்டு விவரங்களைத் துல்லியமாகத் தொகுக்கவும், நிலங்களை மீட்டெடுக்கவும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு புதிய ஆய்வுக் குழுவை அரசு அமைத்துள்ளது. இதுகுறித்து இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்து சமய அறநிலையத்துறை, வருவாய்த் துறை அதிகாரிகளை இணைத்து ஒரு புதிய ஆய்வுக்குழு பிரத்யேகமாக அமைக்கப்படுகிறது.

இந்த குழு பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில் சொத்துகளை முழுமையாக ஆய்வு செய்து, கணக்கில் உள்ள சொத்துகள் மற்றும் வருவாய் இனங்கள், கணக்கில் வராத சொத்துகள், சட்ட விரோத ஆக்கிரமிப்புகள்மற்றும்சட்டவிரோத பெயர் மாற்றங்கள் போன்றவை நடந்துள்ளதா? என முழுமையாக அறிக்கை தயார் செய்து வழங்கும்.

தவறு நடந்திருப்பது கண்டறியப்பட்டால், அதன் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். இக்குழுவுக்குதிருச்சி மண்டல கூடுதல் ஆணையர் தலைவராகவும், கோயில் இணை ஆணையர், பழனி வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் துணை ஆட்சியர், உதவி இயக்குநர் (நில அளவை), தனி வட்டாட்சியர்(ஆலய நிலங்கள்) ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள்.

பழனி கோயில் சொத்துகளை முழுமையாக ஆய்வு செய்து பாதுகாக்கும் முக்கிய முன்னெடுப்பாக இது அமையும். அறுபடை வீடுகளுக்கும் இதேபோல் குழு அமைத்து ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அட்டவணை அனுமன் பள்ளி கிராமம், கொங்கு மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டையினை கலெக்டர் கந்தசாமி வழங்கினார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன் உள்பட பலர் உள்ளனர்.

## வடநாட்டில் வீதிகளில் போராடும் நிலையில்

# தமிழக இளைஞர்கள் திரையரங்கில் நிற்பதுதான் பெருங்கொடுமை!

## சீமான் கடும் விமர்சனம்!!

சென்னை, ஜூலை.23

நாம் தமிழர் இயக்கத்தலைவர் சீமான் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது:

நீட் தேர்வை எதிர்ப்பதாகக் கூறிவிட்டு, அத்தேர்வுக்கு எதிராக இளைய தலைமுறையினரின் தன்னெழுச்சியான போராட்டத்தை அடக்கி ஒடுக்க முயலும் மாநில அரசின் போக்கு சனநாயகத்துரோகமாகும். திரையில், 'ஜனநாயகன்' எனப் பெயர் சூட்டிக் கொள்ளும் முதல்வர் விஜய், தரையில் மாணவர்கள், இளைஞர்கள் மீது காவல்துறையின் மூலம் அரச வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, சனநாயகத்தைப் பச்சைப்படுகொலை செய்யலாமா? திரைப்படத்தில் மட்டும் தான் ஜனநாயகனா? வடநாட்டு இளைஞர்கள் டெல்லி வீதிகளில் கல்வியுரிமைக்காகக் களத்தில் நிற்கையில், தமிழ்நாட்டு இளைஞர்களைத் திரையரங்க வாசலில் நிறுத்தி இருப்பதெல்லாம் ஏற்கவே முடியாத பெருங்கொடுமை.

ஒருபக்கம், டெல்லியில் நடைபெறும் இளைஞர்களின் போராட்டம் மீதான பாஜக அரசின் அடக்குமுறையைக் கண்டிப்பதாகக் கூறிக் கொண்டு, தமிழ்நாட்டில் நடைபெறும் நீட் தேர்வுக்கு எதிரான இளைஞர்களின் போராட்டங்களை தவெக அரசு ஒடுக்க நினைப்பது இரட்டை வேடமில்லையா? பாஜகவைக் கொள்கை எதிரியெனக் கூறிவிட்டு, பாஜகவுக்காக தவெக அரசு செய்யும் மறைமுகச் சேவகமில்லையா இது? கேலிக்கூத்து.நீட் தேர்வை எதிர்த்து அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் போராட்டங்களை முன்னெடுக்கிறபோது அவைகள்அடையாளப் போராட்டங்கள் என்றளவில்தான் கருதப்படும்.

அதேசமயம், மாணவர்களும், இளைஞர்களும், பொதுமக்களும் வீதிக்கு வந்து போராடுகிறபோது, அது சனநாயகப்புரட்சியாக வெடித்து, ஆளும் வர்க்கத்தை அடிபணியச் செய்து, கோரிக்கை முழக்கத்தை நிறைவேறச் செய்யும். அதனை நோக்கிய இளையோர் கூட்டத்தின் அறப்போராட்டத்தை முழுமையாக ஆதரித்து, வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் நடைபெறும் இளையோர் கூட்டத்தின் அறப்போராட்டம் வெல்லட்டும்! நீட் எனும் நுழைவுத்தேர்வு முறை முழுமையாக நீக்கப்படட்டும்! அநீதிக்கு எதிராகப் போர்க்குணத்தோடு களத்தில் நின்றுப் போராடும் என்னுடைய தம்பி, தங்கைகள் அனைவருக்கும் என்னுடைய புரட்சிகரமான வாழ்த்துகளும், அன்பும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

23.07.2026

### டெல்லி போராட்டம்:

# உண்ணாவிரதத்தை கைவிட சோனம் வாங்சுக் நிபந்தனை!

புது டெல்லி, ஜூலை 23

மருத்துவக் கல்வி நுழைவுத்தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட இளம் மாணவர்களின் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று மத்திய அரசு உறுதியளித்தால், தனது உண்ணாவிரதப் போராட்டத்தை இன்றே கைவிடத் தயாராக இருப்பதாக சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய அமைச்சர்கள் ஜே.பி. நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், அமைதியான முறையில் கல்வி முறைக்கான நீதியைக் கோரிப் போராடிய இளம் போராட்டக்காரர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளோ அல்லது சட்ட நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படக் கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஐம்பத்து ஒன்பது வயதான சோனம் வாங்சுக், கடந்த சனிக்கிழமையன்று தந்தர் மந்தர் பகுதியில் இருந்து காவல் துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டு, பின்னர் குர்



கிராமில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தனது இருபத்தைந்தாவது நாளாக அவர் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். மருத்துவமனை படுக்கையில் இருந்து அவர் வெளியிட்ட காணொலிச் செய்தியில், தான் பதினொரு கிலோ எடை குறைந்துள்ளதாகவும், வன்முறைத் தூண்டுதல்கள் இருந்தபோதிலும் அமைதியாகப் போராடிய இளம் மாணவர்களைப் பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். நேற்று இரவில் தன்னைச் சந்தித்துப் பேசிய மத்திய அமைச்சர்கள் நட்டா மற்றும் சிங் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ள அவர், வினாத்தாள் கசிவால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும், நாடாளுமன்றத்தில் விவாதிப்பது குறித்தும் அமைச்சர்கள் உறுதியளித்ததாகக் குறிப்பிட்டார். மேலும், நாடாளுமன்றத்தை நோக்கி நடைபெற்ற பேரணி காவல்துறையின் அடக்குமுறைக்கிடையேயும் மிக அமைதியான முறையில் நடைபெற்றதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தமது கோரிக்கைகள் குறித்து அரசு தரப்பில் உரிய உறுதிமொழி அளிக்கப்படும் பட்சத்தில், லட்சக்கணக்கான இளம் இந்தியர்களின் எதிர்பார்ப்புகளை அரசு செவிமடுத்துள்ளது என்ற நம்பிக்கையுடன் தனது உண்ணாவிரதத்தை நிறைவு செய்யப் போவதாக சோனம் வாங்சுக் மேலும் தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டத்தில் மழை, வெயில் என மாறி வரும் காலநிலை மாற்றத்தால் பசுமையான தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் மலை தொடர்களை தழுவி வரும் மேகம் பயணிகளை பரவசப்படுத்துகிறது.

### திருப்பதியில்

# சர்வ தரிசன டோக்கன் திடீரென ரத்தானதால் பக்தர்கள் அதிர்ச்சி!

திருப்பதி, ஜூலை.23–

திருப்பதியில் உள்ள விஷ்ணு நிவாசம், மாதவம் மற்றும் பூதேவி காம்ப்ளக்ஸ் ஆகிய மையங்களில் தினமும் இலவச சர்வ தரிசன (எஸ்எஸ்டி) டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதைப் பெறும் பக்தர்கள்,அதில்குறிப்பிடப்பட்டுள்ளநேரத்தில்திருமலையில் உள்ள வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ் பகுதிக்குச் சென்று ஏழுமலையானைத் தரிசித்து வருகின்றனர்.

வார இறுதியில் திருமலையில் பக்தர்களின் கூட்டம் கணிசமாக அதிகரிப்பது வழக்கம். இதனால் வியாழக்கிழமைகளில் பக்தர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புதன் கிழமைகளில் வழங்கப்படும் டோக்கன்

விநியோகத்தை திருமலை திருப்பதி தேவஸ்தானம் கடந்த 3 வாரங்களாக ரத்து செய்து வருகிறது.

ஆனால், இதுகுறித்த முறையான முன் அறிவிப்பு எதுவும் வெளியிடப்படாததால், வெளி மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்கள், தர்ம தரிசன டோக்கன்கள்கூட கிடைக்காமல் தவித்து வருகின்றனர். தேவஸ்தானத்தின் இந்த நடவடிக்கைக்கு பக்தர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இதனிடையே, வரும் வெள்ளிக்கிழமை தரிசனம் செய்வதற்கான சர்வ தரிசன டோக்கன்கள், நேற்று மதியம் முதல் வழக்கம்போல் விநியோகம் செய்யப்படும் என்று தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### சத்தீஸ்கரில் குளிர்காலக் கூட்டத்தொடரில்

# பொதுச்சிவில் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்!

### முதலமைச்சர் திட்ட வட்டம்!!

ராய்ப்பூர், ஜூலை 23

சத்தீஸ்கரில் வரவிருக்கும் குளிர்காலக் கூட்டத்தொடரில் பொதுச் சிவில் சட்டம் தொடர்பான மசோதா அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக மாநில முதலமைச்சர் விஷ்ணு தியோ சாய் அறிவித்துள்ளார்.

'எமர்ஜிங் சத்தீஸ்கர்' மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், சத்தீஸ்கர் மாநிலம் பெண்களின் நல்வாழ்வுக்கும் மரியாதைக்கும் எப்போதுமே முன்னுரிமை அளிப்பதாகத் தெரிவித்தார். மேலும், மாநிலத்தின் பழங்குடியினர் பகுதியான பஸ்தரை மேம்படுத்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களும், புதிய தொழில் கொள்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் பெண்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தும் நோக்கில் லட்சபதி திதி திட்டம் மற்றும் பல்வேறு சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், மதமாற்றங்களைத் தடுக்கும் வகையில் கடுமையான சட்டங்கள் முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (23.07.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் அலுவலகத்தில் நேர்மறையான மாற்றங்கள் உண்டாகும். நிலுவையில் இருந்த வேலைகள் சிறப்பாக முடிவடையும். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான நேரத்தை செலவிடுவீர்கள்.

**ரிஷபம்:** பொருளாதார நிலை உயரும். நிதி வரவு திருப்திகரமாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் தேவை.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பணியிடத்தில் மேல் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். தேவையில்லாத தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**கடகம்:** உறவினர்கள் மூலம் நல்ல செய்தி வந்து சேரும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உணர்ச்சிவசப்பட்டு முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** வேலையில் புது உத்வேகம் கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் தேடிவரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**கன்னி:** வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நண்பர்களின் ஆதரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும். பேச்சுவார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். பொருளாதார ரீதியாக முன்னேற்றமான நாள். பயணங்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** திடீர் பணவரவுக்கும் வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். மன அழுத்தம் குறைந்து அமைதி உண்டாகும். தம்பதியிடையே அன்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வேலைச்சுமை சற்று அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும். நிதானமாகச் செயல்படுவது நல்லது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கும்பம்:** காலை 7:54 மணி வரை சந்திராஷ்டமம் இருப்பதால், புதிய முயற்சிகளையோ அல்லது பெரிய முதலீடுகளையோ தவிர்ப்பது நல்லது. அதன் பின் நிலைமை சாதகமாக மாறும்.

**மீனம்:** இன்று காலை 7:54 மணிக்கு மேல் சந்திராஷ்டமம் தொடங்குவதால், வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து அமைதி காப்பது நல்லது. முக்கிய முடிவுகளை எடுப்பதைத் தள்ளிப் போடவும்.



பருவ மழை குறைந்து உள்ளதால் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் குடிநீருக்காக பவானிசாகர் நீர்த்தேக்க பகுதிகளுக்கு கூட்டமாக வந்திருந்த யானைக்கூட்டத்தை படத்தில் காணலாம்.

# ஜிம்பாப்வே அணிக்காக அதிக போட்டிகள்... வரலாற்று சாதனை படைத்த சிக்கந்தர் ராசா



ஜிம்பாப்வே அணியின் நட்சத்திர ஆல்ரவுண்டரான சிக்கந்தர் ராசா, அந்த நாட்டுக்காக அதிக சர்வதேச போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

புளவாயோவில் உள்ள குவீன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நடைபெற்ற வங்காளதேசத்திற்கு எதிரான கடைசி டி20 போட்டியில் அவர் இந்த மைல்கல்லை எட்டினார். இது ராசாவின் 314வது சர்வதேச போட்டியாகும். இதன்மூலம், 313 சர்வதேச போட்டிகளில் விளையாடி முதல் இடத்தில் இருந்த முன்னாள் கேப்டன் ஹாமில்டன் மசகட்சாவின் சாதனையை முறியடித்து, ஜிம்பாப்வே கிரிக்கெட் வரலாற்றில் அதிக சர்வதேச போட்டிகளில் விளையாடிய வீரராக சிக்கந்தர் ராசா புதிய சாதனை படைத்தார்.

2013ம் ஆண்டு மே 3ம் தேதி, இதே குவீன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் வங்காளதேச அணிக்கு எதிராக ஒருநாள் போட்டியில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான ராசா, இதுவரை 22 டெஸ்ட், 156 ஒருநாள் மற்றும் 136 டி20 போட்டிகளில் ஜிம்பாப்வே அணிக்காக விளையாடியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கிய அதே மைதானத்தில், அதே எதிரணிக்கு எதிராக தனது 314வது போட்டியில் களமிறங்கி இந்த வரலாற்று சாதனையை படைத்திருப்பது, ஜிம்பாப்வே கிரிக்கெட் வரலாற்றின் மறக்க முடியாத தருணங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

# ஜூன் மாதத்தின் சிறந்த வீரர், வீராங்கனை... ஐசிசி அறிவிப்பு



ஜூன் மாதத்திற்கான ஐசிசி சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை, நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் நாதன் ஸ்மித் வென்றுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமாக பந்துவீசிய நாதன் ஸ்மித் 16 விக்கெட்டுகளை கைப்பற்றி, நியூசிலாந்து அணி 21 என்ற கணக்கில் தொடரை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். இந்த சிறப்பான ஆட்டத்தின் மூலம், இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் உள்ளிட்ட போட்டியாளர்களை பின்னுக்கு தள்ளி ஐசிசி ஜூன் மாதத்தின் சிறந்த வீரர் விருதை தட்டி சென்றுள்ளார்.

அதேப்போல், ஜூன் மாதத்திற்கான ஐசிசி சிறந்த வீராங்கனை விருதை, 2026 மகளிர் டி20 உலகக்கோப்பையில் சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீராங்கனை டானி வியாட்ஹாட்ஜ் வென்றுள்ளார்.

# டி20 தொடர் ஜிம்பாப்வே சென்றடைந்த இந்திய அணி



ஜிம்பாப்வேக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுவதற்காக இந்திய ஆணி ஹராரே சென்றடைந்துள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டி20 போட்டி வருகிற 23ம் தேதி நடைபெறுகிறது. தொடர்ந்து 2வது போட்டி 25ம் தேதியும், 3வது மற்றும் கடைசி டி20 போட்டி 26ம் தேதியும் நடைபெற உள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணியில் இடம்பெற்றிருந்த சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி, காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியநிலையில், அவருக்கு பதிலாக ரவி பிஷ்னோய் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி சமீபத்தில் அயர்லாந்து மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடர்களில் தோல்வியடைந்த இந்திய அணி, ஜிம்பாப்வே தொடரில் வெற்றி பாதைக்கு திரும்பும் முனைப்புடன் களமிறங்க உள்ளது.

# 'அவெஞ்சர்ஸ் டூம்ஸ்டே' படத்தின் டிரெய்லர் வெளியானது!




உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்டுள்ள மார்வெல் சூப்பர் ஹீரோ திரைப்பட வரிசையில் அடுத்ததாக வெளியாகவுள்ள 'அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே' திரைப்படம் மீது மிகுந்த எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இந்த நிலையில், படத்தின் அதிகாரப்பூர்வ டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

'அவெஞ்சர்ஸ்: இன்பினிட்டி வார்' மற்றும் 'அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம்' போன்ற மாபெரும் வெற்றிப் படங்களை இயக்கிய ரூசோ பிரதர்ஸ், 'அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே' படத்தையும் இயக்கியுள்ளனர். இந்தப் படத்தில் ராபர்ட் டவுனி ஜூனியர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும், ஷூரி, கிறிஸ் எவன்ஸ், ஜேம்ஸ் மார்ஸ்டன், வனேசா கிர்பி, ரெபேக்கா ரோமிஜின் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மார்வெல் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வரும் இந்த திரைப்படம், வரும் டிசம்பர் 17ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதற்கான விளம்பர பணிகளை படக்குழு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

தற்போது வெளியாகியுள்ள டிரெய்லரில் பிரமாண்டமான ஆக்ஷன் காட்சிகள், நவீன கிராபிக்ஸ் மற்றும் பரபரப்பான காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதனால், சமூக வலைத்தளங்களில் டிரெய்லர் வேகமாக வைரலாகி வருகிறது. மார்வெல் ரசிகர்களிடையே படத்தின் மீதான எதிர்பார்ப்பும் மேலும் அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்த ஹல்க், டாக்டர் ஸ்ட்ரேஞ்ச், ஸ்பைடர் மேன் உள்ளிட்ட முக்கிய சூப்பர் ஹீரோ கதாபாத்திரங்கள் டிரெய்லரில் இடம்பெறாதது பலருக்கும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த கதாபாத்திரங்கள் திரைப்படத்தில் முக்கிய திருப்பமாக இடம்பெறக்கூடும் என்ற நம்பிக்கையில் ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

# தனுஷ் கட்சி ஆரம்பித்தால் ஆரம்பித்து விட்டு போகட்டும் கஸ்தூரி ராஜா




தனுஷ் அரசியல் கட்சி தொடங்கப் போவதாக வெளியான தகவல் குறித்து அவரது தந்தையும், இயக்குநருமான கஸ்தூரி ராஜா விளக்கம் அளித்துள்ளார்.

72வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன. 2024ம் ஆண்டு சென்சார்சான்றிதழ் பெற்ற திரைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் நடிகர் தனுஷ் இயக்கி நடித்த 'ராயன்' திரைப்படத்திற்கு சிறந்த திரைப்படத்திற்கான விருது அறிவிக்கப்பட்டது. இது குறித்து தனுஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இயக்குநராக தனக்கு கிடைத்துள்ள முதல் தேசிய விருது தனது வாழ்நாளில் மறக்க முடியாத ஆசீர்வாதம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நடிகர் தனுஷிற்கு விருது கொடுக்கப்பட்டதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாக வதந்தி எழுந்தது.

இதையடுத்து நடிகர் தனுஷின் தந்தையான கஸ்தூரி ராஜாவிடம் இதுகுறித்து கேட்கப்பட்டது. அப்போது அவர் "நடிகர் தனுஷிற்கு தேசிய விருது கொடுக்கப்பட்டது மகிழ்ச்சிதான், அவர் பயணம் பண்ணுகிற வழி, அவருடைய முயற்சிகள், அனைத்துமே அப்படியே இருக்கிறது. அதனால் அவருக்கு விருது கிடைத்திருக்கிறது. மற்றபடி அதில் அரசியல் நிலைப்பாடு என எதுவும் இல்லை. அரசு குழு (ஜூரி) எடுக்கும் முடிவுகளில் தான், தேசிய விருது கிடைக்கிறது. இந்த முறை என் மகனுக்கு இரண்டு தேசிய விருதுகள் கிடைத்துள்ளது. மிகவும் பெருமையான விஷயம்.

தனுஷை விட பெரிய நடிகர்கள் தமிழ்நாட்டில் இல்லையா, அவர்கள் ஏன் குழுவை அதிகாரம் செலுத்தி தேசிய விருதுகள் வாங்கவில்லை. இது அரசு மற்றும் தேர்வுக் குழு எடுக்கும் முடிவுதான் என நான் நினைக்கிறேன். நான்கு பேரை பார்த்து பேசி, ஐயா எனக்கு விருது கொடுங்க என்றும் சொல்லும் அளவிற்கு, தனுஷிற்கு அவ்வளவு பெரிய புத்திசாலித்தனம் எல்லாம் கிடையாது.

இதற்கு முன்னதாக அசுரன் மற்றும் ஆடுகளம் படத்திற்காக அவருக்கு தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. அவர் விருதுகளுக்காக ஏங்குபவர் கிடையாது

தனுஷ் அழைத்தால் படத்தில் நடிக்க போவேன். ஆனால் செல்வராகவன் நடிக்க கூப்பிட்டால் போக மாட்டேன். அவருடன் நடிப்பது கடினம். தனுஷ் கட்சி ஆரம்பித்தால் ஆரம்பித்து விட்டு போகட்டும் இல்லை என்றால் இருக்கட்டும். அதைப்பற்றி எதுவும் கேட்டுக்கொள்ள மாட்டோம்." என்றார்.

சமீபத்தில் தனுஷ் போட்டோ இடம்பெற்றிருந்த ரசிகர் மன்றக் கொடியின் புகைப்படம் சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. அந்தக் கொடியில் இடம்பெற்றிருந்த "எண்ணம்போல் தான் வாழ்க்கை" என்ற வாசகத்தைத் தொடர்ந்து, தனுஷ் தனது ரசிகர் மன்றத்திற்கு புதிய கொடியை அறிமுகப்படுத்தியுள்ளார் என்றும், இது அவரது அரசியல் வருகைக்கான முன்னோட்டம் என்றும் தகவல்கள் பரவின. தனுஷ் ரசிகர் மன்றக் கொடி தொடர்பாக சமூக வலைதளங்களில் பரவிய தகவல்களுக்கு சுப்பிரமணிய சிவா முற்றுப்புள்ளி வைத்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.